2002 அக்டோபர் 25]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர், அரசு ஊழியர்களின் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு, அதாவது JACTTEO-GEO என்ற அமைப்பின் பிரதிநிதிகள், என்னைச் சந்திக்க வேண்டுமென்று நேரம் ஒதுக்குமாறு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களைச் சந்தித்தபிறகு, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்போது அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. அ. பாப்பா சுந்தரம்
2. டாக்டர் தே. குமாரதாஸ்
3. திரு. லா. சந்தானம்
4. திரு. அ. அன்வர் ராஜா
5. திரு. சி. சிவசாமி
6. திரு. வி. ஜெயராமன்

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11—40

THIRU J. HEMACHANDRAN: Hon. Speaker Sir, I raise a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அதாவது, சமீபத்தில் 18-10-2002 அன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்போது வருவாய்ப் பற்றாக்குறை காரணமாக அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப்படிகூட கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிற இந்த நேரத்திலே, இப்படி ஓர் உயர்ந்த அதிகாரியினுடைய பதவியை create பண்ணக்கூடிய ஒருமுறையில், ஒரு சட்டத்தை அனுமதிப்பது சரிதானா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட....(குறுக்கீடுகள்)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலே இருக்கிறவர்களுக்கே வேலை கொடுக்கமுடியாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பணியிலே இருப்பவர்களையே வேலையைவிட்டு வீட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவருக்கு, அவர் பதவி ஓய்வு பெற்ற பின்னாலே, அவருக்கு மீண்டும் பதவி அளிப்பதற்கு வாய்ப்பு கொடுப்பது சரிதானா? இது எந்தவகையிலே பொருத்தமானது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

2002 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக எந்தப் பொறுப்புக்கும் அறநிலையத் துறையின் மூலமாகப் பணி நியமனம் செய்யப்படவில்லை. இப்போதுகூட, முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற 1 இலட்சத்து 70 ஆயிரம் ஏக்கருக்குமேல் இருக்கிற நிலங்களைச் சரிபார்த்து, அவற்றை எடுப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஓர் ஐ.எ.எஸ். அதிகாரியை அங்கே நியமித்து இருக்கிறார்களே தவிர, புதிய பொறுப்பிற்குப் புதிய பணிகளில் யாரும் நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, ஆய்வு செய்யும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. உங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துவிட்டீர்கள். எதிர்ப்புத் தெரிவித்துவிட்டீர்கள். ஆய்வுக்கு வரும்போது உங்களுடைய கருத்தைப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், என்ன?

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களுடைய பதவி நீட்டிப்பைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று நான் சபைக்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்கிற தீர்மானம் இருக்கிறபோது, முதலிலே பேசுகின்ற உரிமை, அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று யார் தீர்மானம் கொடுத்திருக்கிறாரோ